Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டிஎண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஐட்டசி 6 ஆம் நாள் ஜ. ஆகிர் பிறை 15 (22-10-64) வியாழக்கிழமை இதழ் 2:3

சிக்கன செலவிற்கு
வாங்குங்கள் பாவியுங்கள்
மில்க்வைற் நீல சோப்
மில்க்வைற் வெள்ளை சோப்
மில்க்வைற் பார் சோப்
மில்க்வைற் 10 சதம் சோப்
மில்க்வைற் 5 சதம் சோப்

கோர ரயில் விபத்து விசாரணை

# நிபுணரை அனுப்புமாறு

# இந்தியாவிடம் கோரிக்கை

## பகிரங்க விசாரணைக் கமிஷனுக்கு மூவர் பெயர் சிபார்சு

கொழும்பு, புதன்

கடந்த சனிக்கிழமை மீரிகமத்துக்கருகில் நிகழ்ந்த பயங்கர ரயில்விபத்துக்கான காரணங்களைக் கண்டுபிடிக்கும்பொருட்டு, இந்தியாவின் உதவியை இலங்கை நாடியுள்ளது. இந்திய புகையிரத பகுதியைச் சேர்ந்த நிபுணர் ஒருவரை இங்கு அனுப்பிவைக்குமாறு இந்திய அரசாங்கத்தை இலங்கை கேட்டுள்ளது. கவர்னர் ஜெனரலினல் நியமிக்கப்படவிருக்கும் உத்தேச பகிரங்க விசாரணைக் கமிஷனுக்கு போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா மூன்றுபேரை சிபார்சுசெய்திருக்கிறார்.

பகிரங்க விசாரணைக் கமிஷனின் அங்கத்தவர்களாக மூன்றுபேரை நியமிக்கும்படி போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா கவர்னர் ஜெனரலைக் கேட்டுள்ளார். ஓய்வுபெற்ற அஸைஸ் கமிஷனர் திரு. டி. ஈ. விஜயவர்த்தன, பல்கலைக்கழக பேராசிரியர் திரு. ஈ. ஓ. ஈ. பெரேரா ஆகியோரின் பெயர்களையும் அமைச்சர் சிபார்சுசெய்துள்ளார்.

இந்திய புகையிரதப் பகுதியைச்சேர்ந்த அனுபவமுள்ள தொழில்நுட்ப என்ஜினியரிங் நிபுணர் ஒருவரை அழைக்குமாறும் மந்திரி அனில் சிபார்சு செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து புதுடில்லியிலுள்ள இலங்கை ஸ்தானிகர் மூலம் இந்திய அரசாங்கத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

### நஷ்டஈடுசபை நியமிக்கப்பட்டது

மீரிகமம் ரயில் விபத்தில் மாண்டவர்களின் உறவினர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நஷ்டஈடு வழங்குவதென கூடிய மந்திரிசபை முடிவுசெய்துள்ளது. இன்று நஷ்டஈடு வழங்குவதற்கானநடவடிக்கைகளை மேற்கொள்ள உடனடியாக நஷ்டஈடு சபை ஒன்றை நியமிப்பதென்றும் மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

### "ரம்பாலாவை பதவி நீக்குக"

இன்று அரசாங்க லிகிதர் சங்கத்தினர் சென்ற வாரம் நடைபெற்ற கோர ரயில்விபத்தை யொட்டி ஜெனரல் மனேஜர் திரு. ரம்பாலாவையும் மற்றும் உத்தியோகத்தர்களையும், ஏன் இந்த விபத்து ஏற்பட்டது என்ற விசாரணை முடியும்வரை தற்காலிகமாக வேலையில் நின்றும் உடனடியாக, நிறுத்தும்படி அரசாங்கத்திடம் கோரியுள்ளது. லிகிதர் சங்கத்தினர் கூற்றிற்கு திரு. ரம்பாலா ஏதும் கூற மறுத்துவிட்டார்.

### "பழைய தண்டவாளங்கள் காரணம்"

சனிக்கிழமை நடைபெற்ற புகையிரத விபத்திற்கு காரணம் பழைய தண்டவாளங்களே என்று புகையிரத பிரதான மெக்கானிக்கல் என்ஜினியர் திரு. பி. இராஜகோபால், மாஜிஸ்திரேட் விசாரணையின் போது தெரிவித்தார். விபத்து நடந்த பாதையின் பகுதி முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் பார்க்க நீண்ட காலமாக உபயோகத்திலிருந்து இருக்கின்றது என்றும் திரு. ராஜகோபால் தெரிவித்தார்.

ஆனால் நேற்று நடைபெற்ற உயர்தர உத்தியோகத்தர்கள் மகாநாட்டின்போது புகையிரத பாதைகளுக்கு பிரதான பொறுப்பாயுள்ள சிவில் என்ஜினியர் திரு.என்.ஏ. வைத்திலிங்கம், ரயில்வே ஜெனரல் மனேஜர் திரு. ரம்பாலாவிற்கு தண்டவாளத்தில் ஒருவித பிழையும் இல்லையென்று உறுதியளித்தார்.

### மாணவர்களின் வேலைநிறுத்தம்

கொழும்பு, புதன்

கொழும்பிலுள்ள அரசினர் லலித கலை கல்லூரி மாணவர்கள் இன்று காலை வேலைநிறுத்தம்செய்தனர். அரசாங்க ஆசிரியர் நியமனங்கள் தங்களுக்கு வழங்கப்படவேண்டுமென்று கோரியே அவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். தங்களுக்குரிய வேலை கொடுக்கப்படாவிட்டால், கல்லூரி மூடப்பட வேண்டுமென்றும் அவர்கள் கோரினர். கலாச்சார மந்திரியைச் சந்திக்க ஊர்வலமாகச் சென்ற அவர்கள், அவர் காரியாலயத்தில் இல்லாதகாரணத்தால் உதவி மந்திரியைச் சந்தித்து கோரிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

இலங்கை-இந்தியர் பிரச்னை

## இந்தியா செல்வதற்கு தூதுகோஷ்டிக்குத் தடை!

### இ. தொ. காங்கிரஸ் வருத்தம்

கொழும்பு, புதன்

இலங்கை இந்திய பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்காக புதுடில்லிக்கு இன்று புறப்பட ஏற்பாடு செய்திருந்த ஐந்து பேர்கள் கொண்ட இலங்கை தொழிலாளர் தூதுகோஷ்டி ஒன்றிற்கு அரசாங்கம் பிரயாணப்பத்திரங்கள் வழங்க மறுத்து விட்டது. இந்த தூது கோஷ்டியினர் புதுடில்லிக்குச் சென்று இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடாத்தும் பொழுது தாங்களும் இலங்கையிலுள்ள இந்தியர்களின் வருங்காலத்தைப் பற்றி தெளிவுறுத்த விரும்பினர்.

இந்த ஐந்துபேர் கொண்ட தூதுகோஷ்டியை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் புதுடில்லிக்கு அனுப்புவது என்று தீர்மானித்ததாகவும், அரசாங்கம் பிரயாணப் பத்திரங்கள் கொடுக்க மறுத்து விட்டதால், தங்கள் கருத்தை டில்லி அரசாங்கத்திற்கு தெரிவிக்க விடாது இந்த அரசாங்கம் தடைசெய்து விட்டதென்றும் திரு. தொண்டமான் தெரிவித்தார்.

புதுடில்லியில் 1954-ம் ஆண்டு நடைபெற்ற இலங்கை இந்தியர் பிரச்னை பேச்சுவார்த்தையின் போது இலங்கைத் தொழிலாளர் தூதுகோஷ்டியொன்றினை இப்படியான பேச்சு வார்த்தைகளில் உத்தியோகபூர்வமாக பங்குபற்ற அரசாங்கம் அனுமதித்தது. இந்த பிரச்னையை அரசாங்கம் தீர்க்க விரும்பவில்லை அதன் காரணமாகவே எங்கள் தூதுகோஷ்டி செல்லுவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை என்று திரு. தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

## 21 அம்ச கோரிக்கைகள் உடன் சமர்ப்பிக்க முடிவு

கொழும்பு, புதன்

20 லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களும் உத்தியோகத்தர்களதும் நலனோடு கொள்ளவேண்டுமென்ற 21 அம்ச கோரிக்கைகள் அரசாங்கத்திடமும் தனியார் துறையிடமும் உடனே சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

இந்தக் கோரிக்கைகள் உடனே சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நேற்றிரவு கூடிய தொழிற்சங்கங்களின் கூட்டு கவுன்சில் தீர்மானித்தது.

இக்கோரிக்கைகள் பற்றி அரசாங்கத்துக்கும் தனியார் துறைக்கும் சமர்ப்பிக்கக்கூடிய வகையிலான மகஜரை தயாரிக்கஒரு உபகமிட்டி நியமிக்கப்பட்டது.

(2-ம் பக்கம் பார்க்க)

## தீயினால் 11,800 பேர் பலி

நியுயோர்க், அக். 21

சென்ற ஆண்டில் அமெரிக்காவில் தீவிபத்துக்களில் மட்டும் 11,800 பேர் இறந்துள்ளனர் என்று அதிகாரபூர்வமான புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.



மலிவு விற்பனை
எல்லாப் பொருட்களின்
விலைகளும் குறைக்கப்பட்டிருக்கின்றன.
15 – 10 – 64 தொடக்கம் 2 – 11 – 64 வரை
100 ரூபாவுக்குமேல் சாமான் எடுக்கும் முதல் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு
மூன்று விலையுயர்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
ஆ. அப்பையா அன் கோ.,
82, காங்கேசன்துறை வீதி, கிளை: 54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
போன்: 506 தந்தி: 'வணக்கம்'

Cheap Sale
OR
No Sale
Our PRICES are Always
COMPETITIVE
Visit for your
DEEPAVALI
PURCHASES
AT
DAYARAMS
JAFFNA

### மணிவாக்கு

பட்சபாதங்களை விலக்கிச் சிந்தித்துப் பார்த்துத் தீவிரமாகச் செயல் புரிய வேண்டிய தருணம் இது. பலனேதும் கிட்டாது என்று முதலிலேயே அமங்கள முடிவு செய்வது சமயத்தின் தேவைக்கு நன்மை செய்யாது.

—ராஜாஜி

## சீனக் குண்டு: ஜப்பானில் கவலை

டோக்கியோ, அக். 21

ஜப்பானில் சில பகுதிகளில் சீன அணுசோதனை விளைவாக 100 சதவீத கதிரியக்கத் துகள்கள் பரவியிருப்பதாயும் இது பற்றி ஜப்பானிய மக்கள் கலவரமடைந்திருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. அணு ஆயுதங்களை முற்றாகத் தடைசெய்ய வேண்டுமெனக் கோரிய சீன, அதேசமயம் அணுகுண்டை வெடித்திருப்பதாக ஜப்பான் அரசாங்கம் வன்மையான கண்டனம் தெரிவித்திருக்கிறது.

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஐப்பசி மீ 6 உ. (22-10-64)

## நிரந்தரமான தீர்வு வேண்டும்

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரான 'நாடற்றவர்கள்' பற்றி இலங்கை-இந்திய அரசாங்கங்களுக்கிடையில் இன்று பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின்றன. இரு நாட்டுப் பிரதம மந்திரிகளும் இன்று சந்திக்கின்றனர். இரு பிரதமர்களும் சனிக்கிழமை இப்பிரச்னைபற்றி முறையான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவிருக்கின்றனர். பிரச்னையில் சம்பந்தப்பட்ட 'நாடற்றவர்களின்' கருத்தை இலங்கை அரசாங்கமோ இந்திய அரசாங்கமோ தெரிந்துகொள்ளாமலே அவர்களின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிப் பேசுகின்றனர். இரு நாடுகளின் நட்புறவைப் பாதிக்காமல் இப்பிரச்னைக்கு நல்லதொரு முடிவு கிடைக்கவேண்டுமென்பதே எல்லோருடைய ஆவலுமாகும்.

'நாடற்றவர்'பற்றி இலங்கை இந்திய அரசாங்கங்களுக்கிடையில் இதுவரை பல தடவைகளில் பேச்சுவார்த்தைகளும் உடன்பாடுகளும் ஏற்பட்டபோதிலும் இது தீராத பிரச்னையாகமட்டுமன்றி பெரும் பிரச்னையாக வளர்ந்துமுள்ளது. புரையோடிப்போன இப்பிரச்னைக்கு ஒரு முடிவு காணப்படவேண்டுமென்ற கருத்து இப்பொழுது இரு அரசாங்கங்களுக்கும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இப்பிரச்னைபற்றி இலங்கையிலுள்ள முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய இலங்கைப் பிரதமர் சிறிமா, இலங்கைக் கோஷ்டியில் தனது இரு முக்கிய மந்திரிகளையும், தமது அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி, குடியேற்ற வெளியேற்ற இலாகா அதிகாரி, மற்றும் சட்ட வல்லுனர்களையும் சேர்த்துக்கொண்டிருப்பது இப்பிரச்னைக்கு ஒரு முடிவு காண்பதில் இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள அக்கறையையும் முக்கியத்துவத்தையும் காட்டுகிறது.

இலங்கையில் 1965-ம் வருடம் ஜனவரி முதல் திகதியிலிருந்து வர்த்தக ஸ்தாபனங்கள் யாவும் இலங்கையர் மயமாகிவிடும். இலங்கையர்களுக்கே ஏற்றுமதி, இறக்குமதி, வர்த்தகம் அனுமதிக்கப்படும். இலங்கையரல்லாதவர்கள இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டதிகாரி அனுமதி வழங்கினால் இவ்வர்த்தகத்தில் ஈடுபடலாம். இதுதவிர எந்த வர்த்தக ஸ்தாபனமும் 'இலங்கையர்' என்பதை நிரூபிக்கத் தவறிய எவரையும் வேலைக்கு வைத்திருக்க முடியாது. இச் சட்டவிதிகளின் கீழ் இந்திய வம்சாவளியினரான நாடற்ற மக்கள் மட்டுமல்லாது தங்கள் தந்தையாரினதும் பாட்டனாரினதும் பிறப்புப்பதிவை நிரூபிக்க முடியாத இலங்கையர்களும் கூட பாதிக்கப்படுவர். அதே சமயம் 1954-ம் ஆண்டு செய்யப்பட்ட நேரு-கொத்தலாவலை உடன்படிக்கையில் உள்ள ஷரத்து இலங்கையில் தொழில் செய்யும் இந்திய வம்சாவளியினர் பலர் 55 வயது வரை இலங்கையில் தொடர்ந்திருக்கலாமென்றும் அவர்கள் இந்தியப் பிரஜையாகத் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறது. இந்த ஷரத்தின் கீழ் இந்திய வம்சாவளியினர் பலர் இலங்கையில் 55 வயதுவரை தொடர்ந்து தொழில் செய்யலாமென்ற நம்பிக்கையில் இந்தியப் பிரஜையாகப் பதிவு செய்து இந்திய 'பாஸ்போர்ட்டும்' பெற்றுள்ளனர். இவர்களும் கூட 1965-ம் ஆண்டு ஜனவரி முதல் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் 'இலங்கையர் மய' திட்டத்தினால் பாதிக்கப்படுவர்.

இந்நிலையில் இன்று புதுடில்லியில் இலங்கை இந்திய அதிகாரிகளுக்கிடையில் ஆரம்பமாகும் பேச்சுவார்த்தைகள் ஒரு நல்ல முடிவுக்கு வழிவகுத்துத் தாருக வேண்டும். இம்முறை நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் ஒரு சுமுகமான, நிரந்தரமான தீர்வு காணப்படா விட்டால் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரே பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் போதிய சான்ருகும்.

இலங்கையிலுள்ள 'நாடற்றவர்'களான இந்தியவம்சாவளியினரின் பிரச்னை மனிதர் சம்பந்தப் பட்டது. இதை மனிதாபிமானத்துடன் தான் அணுக வேண்டுமென்பது காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயகாவின் கொள்கையாகும். மனிதனின் துன்பத்தை நீக்கவே புத்தர்பிரான் அவதரித்தார். புத்தபிரானின் போதனையைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் இலங்கை அரசாங்கம் மனிதர்களான இந்திய வம்சாவளியினரின் துன்பத்தையும் மனதில் கொண்டு நல்லதொரு முடிவை செய்யுமென்று எதிர்பார்க்கிறோம்.

# பத்திரிகை மசோதாவை அமுலாக்க ஆசிரியர் சங்கம் கோரிக்கை

மட்டக்களப்பு, புதன்

இங்கேட்டின் குடியியல் உரிமையான எழுத்துச் சுதந்திரத்தைப் பறிக்காமல் பத்திரிகை மசோதாவை நடைமுறைப் படுத்தவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் தமிழாசிரியர் சங்கத்தினல் நிறைவேற்றப்படவிருக்கிறது.

அகில இலங்கைத் தமிழாசிரியர்சங்க 19-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் சனிக்கிழமை கண்டியில் நடைபெறும்போது மேற்கண்ட தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கும் 19 தீர்மானங்களுள் சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

கல்வி வெள்ளை அறிக்கையில் தோட்டப் பாடசாலைகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு அருசகரும மொழி அப்பாடசாலைகளில் கல்வியூட்டும் மொழியாக அமையும்" என்றிருப்பது நீக்கப்பட்டு தோட்டப் பாடசாலைகளிலும் சர்வதேச கல்வியாளர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டபடி மாணவரின் தாய்மொழியிலேயே கல்வி யூட்டப்படவேண்டும்.

தாய்மொழி மூலமே கல்வி போதிக்கப் படவேண்டும் என்ற கொள்கைக்கு முரணாக பெற்ருேரின் விருப்பப்படி போதனாமொழியைத் தெரிவு செய்யலாம் என்று வெள்ளை அறிக்கை கூறுவதை வன்மையாகக் கண்டிப்பதுடன் இற்றைவரை அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கைகளுக்கு அமைவாக தமிழ் குழந்தைகளுக்கு தமிழ்மொழி மூலம் கல்வி போதிக்கப்படவேண்டும். தமிழ் பாடசாலைகள் மகாவித்தியாலயங்களாக மாற்றப்படும் போது உண்டாகும் அதிபர் பதவிகள் தமிழாசிரியர்கட்கே கொடுக்கப்பட வேண்டும்.

### பாடப்புத்தகங்கள்

அரசாங்கம் பாடப் புத்தகங்களை அமைத்துக் கொள்ள அன்மையில்எடுத்துக்கொண்ட முறையை இச் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. பாடபுத்தகங்களைத் தெரிவு செய்யும் உரிமை பாடசாலைகளுக்கே இருக்க வேண்டும்.

மொழிவேறுபாடு காட்டாது சம சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்ற எங்கள் நீண்டகால கோரிக்கையை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும்.

## எட்மண்ட் சமரக்கொடி யாழ்ப்பாணம் வருகிருர்

யாழ்ப்பாணம், வியா.

லங்கா சம சமாஜக் (புரட்சிக் குழு) கட்சியைச் சேர்ந்த எட்மண்ட் சமரக்கொடி அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வரவிருக்கிருர். அடுத்த மாதம் 8-ம், 9-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பல பொதுக் கூட்டங்களில் இவர் கலந்துகொள்வார். 8-ம் திகதியன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஒரு பொதுக்கூட்டத்தில இவர் சொற்பொழிவாற்றுவார்.

சமரக்கொடியின் கட்சியைச் சேர்ந்த இன்ெருரு பிரமுகர் திரு. வி. காரளசிங்கம் தமது கட்சிக்கு ஆதரவு தேடுமுகமாகவும் இன்னும் கட்சிக்கு வேண்டிய தேவைகளைச் செய்வதற்காகவும் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்திற்கு வந்து ஒரு வாரம் தங்குவார்.

## புதிய தியேட்டர் திறப்புவிழா

காங்கேசன் துறை, புதன்

காங்கேசன்துறையில் நவீன முறையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள யாழ் தியேட்டர் டாக்டர் பசுபதியால் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

## கட்டுப்பாடு அவசியமில்லை

வாரியபொலை, புதன்

தவருக செய்திகளை பிரசுரிப்பதற்கு தண்டனையளிக்க நீதிமன்றமிருக்கிறது. ஆகலால் பத்திரிகை கட்டுப்பாடு அவசியமில்லையென குழுகமுவ கிராம சபைத் தலைவர் திரு. ஏ. சந்திரசேகரா, பத்திரிகைகளை அரசாங்கம் எடுக்கும் தீர்மானத்திற்குக்கண்டனம் தெரிவித்துப் பேசுகையில் கூறினுர்.

பத்திரிகைகளை அரசாங்கம் எடுப்பதை கண்டித்து ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

## 21 அம்ச . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பிறின்ஸ் ராஜசூரியா, திரு. பாலாதம்பு, திரு. அசோகா ஹேரத், திரு. திலக் சேகரா, ஜனப் ஏ. அசீஸ், திரு. என். சண்முகதாஸன் ஆகியோர் இந்த உபகமிட்டியில் அங்கம் வகிக்கிருர்கள். தொழிற்சங்கங்களின கூட்டு கவுன்சிலின் காரியதரிசியும் இந்த மகஜர் தயாரிப்பதில் கலந்துகொள்வார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட 18 தொழிற்சங்கங்களில் 8 சங்கங்கள் 21 அம்சக் கோரிக்கைகளையும் உடன் சமர்ப்பிக்க வேண்டும் என்னும் பிரேரணைக்கு சாதகமாக வாக்களித்தனர். அகில இலங்கை வங்கி ஊழியர் சங்கம் இதற்கு எதிராக வாக்களித்தது. இந்தக் கோரிக்கைகளை இந்த வருடம் டிசம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கலாமென வங்கி ஊழியர் சங்கம் அபிப்பிராயம் வெளியிட்டது.

## சங்கானையில் காந்தி ஜெயந்தி விழா

சுழிபுரம், வியாழன்

மக்களின் வாழ்வுக்கு வழிகாட்டிய மகான்களின் தினங்களை கொண்டாடி விழா எடுக்கும் நாம் அவர்களின் உயர்ந்த இலட்சியங்களை கடைப்பிடிக்க வேண்டுமென்று சங்கானை நிகரை வாலிப மன்றத்தினரால் காந்தி ஜெயந்தி விழா நிகரை வைரவராலய முன்றலில் நடைபெற்றபோது விழாவுக்குத் தலைமைவகித்த பண்டிதர் சி. வேலுப்பிள்ளை தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் யாழ்ப்பாணத்திலுள்ள வாலிபர்கள் திருட்டுக் குற்றங்களைச் செய்து நீதிமன்றங்களில் நிற்பதைக் காணும் போது வேதனையாக இருக்கிறதென்றும் காந்தி மகான் வழியைப் பின்பற்றிச் சென்ருல் இவ்வாருன குற்றங்கள் நாட்டில் அதிகரிக்க இடமில்லை என்றும் கூறினர்.

திருவாளர்கள் கா. வேல்முருகன், மு. சிவானந்தம், நாவேந்தன், தமிழ்மாறன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். விழாவில் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## களத்து மேடு

எவ்வகைப் பயிராயினும்சரி, அது நன்ருகச் செழித்து வளர்ந்து பூரணமான பலன் தருவதற்கு முக்கியமான மூல காரணம் விதை. அடுத்தபடியாகத்தான் நிலத்தின் தன்மை, பசளை, நீர்பாய்ச்சுதல் முதலியன வருகின்றன. எவ்வளவு தான் பண்படுத்தப்பட்ட வளம் பொருந்திய நிலமாயிருந்தாலும்அதிலிடப்படும் வித்துநிலத்துக்குப் பொருத்தமானதாய் இல்லாவிட்டால் அதிலிருந்து எழும்பும்பயிர் விசேஷ பலனைக் கொடுக்கமாட்டாது. நிலத்துக்கு ஏற்ற விதையைத் தெரிவுசெய்வதால் உண்டாகும் பலனை கமக்காரர் நன்கு தெரிந்திருந்தும் சிலர் ஊக்கமின்மையினலோ அல்லது வசதிக் குறைவினலோ பொருத்தமற்ற விதைகளை விதைத்து பூரண பலன் அடையாமல் போய்விடுகிருர்கள்.

இலங்கையின் வரண்ட பிரதேசங்களில் - முக்கியமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் - சூரியவெப்பம் அதிகமாகையால் மண்ணிலுள்ள நீர்மை ஆவியாக மாறிப்போக எஞ்சிய உப்பு சத்துகள் மண்ணில் அதிகமாக செறிந்திருக்கும். இதுபோக, கிழக்குக் கரையோரம் முழுவதும், யாழ்ப்பாணக் குடாநாடும் தீவுகளும் சதாகாலமும் உப்புநீர் கலந்த கடலேரிகளால் சூழப்பட்டிருக்கின்றன. கடல் நீர் கலப்பால் உண்டாகும் உப்புத் தன்மையும் நிலத்தோடு சேர்ந்து விடுகிறது. இப் பிரதேசங்களில் நெற்பயிர் செய்வோர் நிலத்தின் உப்புச் சவரை எதிர்க்கக்கூடிய நெல் இனங்களைத் தெரிவு செய்து விதைக்கவேண்டும்.

சில இடங்களில் இந்த விதி பின்பற்றப்படுகிறது. உதாரணமாக, மட்டக்களப்பு பட்டினமாகிய புளியந்தீவுக்கு கூப்பீடு தொலையில் இருக்கும் எருமைத் தீவு சுற்றிவர கடலேரியால் சூழப்பட்டிருக்கிறது. இச் சிறிய தீவின் மண்ணில் உவர்த் தன்மை மண்டிக் கிடக்கிறது. வேளாண்மைக் காலத்தில் சில சமயம் ஏரியிலுள்ள நீர் வயல்களை மூடிமுடுவதுமுண்டு. அப்படி இருந்தபோதிலும் எருமைத் தீவில் நல்ல நெல் சாகுபடி கிடைத்துவருகிறது. இதற்குக் காரணம் அங்குள்ள கமக்காரர் நிலத்துக்குப் பொருத்தமான நெல் விதைகளை விதைப்பதே. 'உவர் கறுப்பன்', 'கல்லுண்டை' என்ற நெல் இனங்கள் இந்த எருமைத்தீவிலும் கடலேரிகள் சூழ்ந்த ஏனைய மட்டக்களப்புப் பகுதிகளிலும் சாகுபடி செய்யப்படுகின்றன.

பொதுவாக உப்புச் சவரை எதிர்த்து வளரக்கூடியது 'பெரிய வெள்ளை' என்ற நெல் இனம். இதைத் தவிர 'சவர் கூரன்', 'உவர் வெள்ளை' என்ற நெல்லினங்களும் உப்புத் தன்மையை எதிர்க்கும் சக்திவாய்ந்தன.

சவர்ப் பூமியில் நெற்பயிர் செய்பவர்கள் கவனிக்கவேண்டிய நான்கு பிரதானமான விஷயங்கள் உண்டு. ஒன்று, கடல்நீரோ, கடலேரி நீரோ புகாத வண்ணம் வரம்புகளை உயரமாகக் கட்டுதல். இரண்டு, உப்புச் சத்துள்ள பதார்த்தங்கள் மேல் மண்ணுக்கு வராமல் தடுப்பதற்காக ஆழமாக உழுது அடிக்கடி மறுத்தல். மூன்று, பனையோலையை ஆழமாகத் தாழ்ப்பது. (உப்புச் சத்து மேல் எழும்பாமல் தடுப்பதற்குப் பனையோலை உதவிசெய்யும்) நாலு, உப்புச்சத்தை எதிர்க்கக்கூடிய நெல் விதைகளை நாற்றுப் போட்டுவைத்து, ஐப்பசியில் நல்ல மழைபெய்த பின் நட்டால் நல்ல சாகுபடி வருவதற்கு ஒரு தடையும் இல்லை.

மேலே சொல்லப்பபட்ட நெல்லினங்சள் எல்லாம் நாலு நாலரை மாதத்தில் விளைவன. 'சுதாவி', 'பொக்கழி'

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

என்ற நெல்லினங்கள் இலங்கையின் தென்பாகத்தில் மாத்தறை, காலி, அம்பலாங்கொடைப் பகுதிகளில் ஐந்து மாதப் பயிராக வளருகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரையில், உப்புத் தன்மையால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வீணாகக் கிடக்கிறது. நல்ல, பொருத்தமான நெல் விதைகளைத் தெரிவதாலும் மேற்கூறப்பட்ட நான்கு பிரதான விதிகளைக் கைப்பிடிப்பதாலும் இந்த நிலங்களையும் "பொன் விளையும் பூமி" ஆக்கலாம்.

— கலப்பை

# சீனாவுக்கு "யுனெஸ்கோ" கதவடைப்பு

## நூற்றாண்டின் மாபெரும் மனிதர் என நேருவுக்கு புகழ் மாலை

பாரிஸ், அக். 21

ஐ. நா. கல்வி, சமூக, கலாச்சார ஸ்தாபனத்தின் பொது மகாநாடு நேற்று சீனாவை அதில் அனுமதிக்க மறுக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. தீர்மானத்தை ஆதரித்து 50 வாக்குகளும், எதிர்த்து 35 வாக்குகளும் பதிவாயின. 18 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

வாக்களிக்காத நாடுகளில் சென்ற ஆண்டு சீனாவை அங்கீகரித்த பிரான்சும் ஒன்று.

பதவியிலிருந்து விலகும் சென்ற ஆண்டு ஐ. நா. கல்வி, சமூக, கலாச்சார ஸ்தாபனத்தின் தலைவரான பிரேஸிலைச் சேர்ந்த பேராசிரியர் கர்னேரோ, காலஞ்சென்ற நேரு, கென்னடி, போப்பாண்டவர் ஜோன் ஆகியோருக்கு புகழாஞ்சலி தெரிவித்தார். சமாதானத்துக்குப் பாடு பட்ட இந்த மூவரும் இந்த நூற்றாண்டின் மாபெரும் மனிதர்கள் என அவர் கூறினார்.

"மகாத்மாகாந்தி, ஜவஹர்லால்நேரு, ரவீந்திரநாத்தாகூர் ஆகியோர் நவபாரதத்தை ஆக்கிய ஒப்பற்ற தலைவர்கள். நேருவின் தீரமும், சுதந்திர லட்சியமும் அவரது எழுத்துக்களிலே பரிணமித்துக் கிடக்கின்றன. 2 ஆண்டுகளுக்கு முன் திரு. நேரு "யுனெஸ்கோ" மகாநாட்டில் ஆற்றிய உரை அற்புதமானது. வருங்கால சந்ததியினர் இதைக் கேட்டுப் பயனடையும் பொருட்டு இந்த உரையின் ஒலிப்பதிவை ஐ. நா. கல்வி, சமூக, கலாச்சார ஸ்தாபனம் பாதுகாத்து வைக்கும்" என்றும் பேராசிரியர் கர்னேரோ கூறினார்.

மகாநாட்டில் இந்தியப்பிரதிநிதி திரு. சக்ளா பேசுகையில் சீனாவின் பொறுப்பற்ற போக்கும், வரட்டுக் கௌரவமும் அது வெடித்துள்ள அணுக்குண்டுக்கு அடையாளமாக விளங்குகிறது என்றும், இந்தியாவுக்கும் அணுக்குண்டு செய்ய முடியும் என்றும், ஆனால் அணுகுண்டு செய்யும் ஆசையோ, நோக்கமோ தங்கள் நாட்டுக்குக் கிடையாது என்றும் கூறினார்.

# அமெரிக்க வாக்காளர்களில் பாதிக்கு மேல் பெண்கள்

## தேர்தல் பிரசாரம் பற்றிய விபரம்

வாஷிங்டன், அக். 21

அமெரிக்காவில் உயர் பதவிகளுக்குத் தேர்தல் பிரசாரம் நடத்தும் முறைகள் இன்று பெரிதும் முன்னேறியுள்ளன. முன்காலத்தில் நாட்டுப்புறங்களுக்குப் போய்வர அபேட்சகர்கள் குதிரைகளையே நம்பியிருந்தனர். வாக்காளர்களுக்கு தமது செய்திகளைத் தெரிவிக்க அவர்களுக்குள்ள ஆற்றல், அவர்களது பேச்சுத் திறமையையே பொறுத்திருந்தது.

ஆனால் இன்று தேர்தல் பிரசாரம் நடத்தும் துறையில் விஞ்ஞானம் பெரிதும் துணை செய்கிறது. டெலிவிஷனும், ஜெட்விமானங்களும் இன்று இன்றியமையாத பிரசாரக் கருவிகளாகிவிட்டது.

இந்த மாதம் முற்பகுதிக்குள் (அப்போது நடப்பு ஆண்டுத் தேர்தல் இயக்கம் பாதிக் கட்டத்தைத் தாண்டியிருந்தது) ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் இரு அபேட்சகர்களும் விமானம், ரயில், கார் ஆகிய வாகனங்களைப் பயன்படுத்தி நாடு முழுவதிலும் குறுக்கும் நெடுக்கும், ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்திருந்தனர். லட்சக்கணக்கான வாக்காளர்களிடையே பேசியிருந்தனர்.

பல்லாயிரக்கணக்கில் இன்னும் பலர் பல மைல்கள் தொலையில் தம் வீடுகளில் இருந்தவாறே ஜனநாயக, குடியரசுக்கட்சி அபேட்சகர்களை டெலிவிஷனில் பார்த்திருப்பார்கள், ரேடியோவில் அவர்களது பேச்சுக்களைக் கேட்டிருப்பார்கள்.

1889-ல் ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, அவர் வெற்றி பெற்ற செய்தியை ஒருவர் குதிரையில் சவாரி செய்து வந்து அவரிடம் தெரிவித்தார். பத்தொன்பதாவது நூற்றாண்டில் தேர்தலில் போட்டியிட்டவர்கள் பிரசாரமே செய்வதில்லை எனலாம். "பதவி ஆட்களைத் தேடிப் போக வேண்டும்" என்பது அந்நாளையக் கோட்பாடு.

1896 வரையில் வோட்டுத் தேடி குருவளிப் பிரசாரம் செய்வதென்பது யாரும் கேள்விப்படாத ஒன்று. அப்போது வில்லியம் மக்கின்லி (குடியரசுக்கட்சி) வில்லியம் ஜெனிங்ஸ் பிரையான் (ஜனநாயகக்கட்சி) ஆகிய இருவரும் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டார்கள்.

பிரயான் நாடு நெடுகிலும் சுற்றினார். 29 மாநிலங்களில் 600 பொதுக் கூட்டங்களில் பேசினார். 50 லட்சம்பேர் அவரது பேச்சுகளைக் கேட்டனர்.

மாறாக, மக்கின்லி தம் சொந்த ஊரில் இருந்தவாறே பிரசாரம் செய்வதென்று முடிவு செய்தார். ஒஹியோ மாநிலத்திலுள்ள கான்ட்டன் நகரமே அவரது சொந்த ஊர். அதிகாலை முதல் இரவு வெகு நேரம்வரை தனி ரயில்களில் நாடு முழுவதிலுமிருந்து பல்லாயிரக்கணக்கானவர்களை கான்டன் வருமாறு அவரது ஆலோசகர்கள் ஏற்பாடு செய்தனர். அவர்களது கூட்டங்களில் அவர் பேசினார்! அவரே வெற்றி பெற்றார்.

மற்றொரு குடியரசுக்கட்சி அபேட்சகர் வாரன் ஜி. ஹார்டிங், 1924-ல் மக்கின்லி தந்திரத்தையே கையாண்டு வெற்றி பெற்றார். அவர் தமது வீட்டு முற்றத்தில் தேர்தல் கூட்டங்கள் நடத்தினார். எனினும் இதற்குப் பின்னர் அபேட்சகர்கள் நாடு முழுவதிலும் சுற்றித் தமது கருத்துக்களை வாக்காளர்களுக்கு எடுத்துரைக்க முற்பட்டனர்.

காலப்போக்கில் தந்தி, மின்விசை, ரயில் ஆகியவை நாட்டைக் குறுக்கிவிட்டன. 19-வது நூற்றாண்டின் இறுதியில் தேர்தல் பிரசாரத்தில் ரயில்கள் முக்கியபங்கு வகித்தன.

1908 வாக்கில் பேசாதசெய்திப்படங்கள் வந்தன. இது தகவல் போக்குவரத்தில் மற்றொரு முன்னேற்றம். ரேடியோவும் பேசும் படங்களும் தோன்றிய பின்பு, அரசியல் பிரசாரம் உண்மையிலேயே பெருவாரியான மக்களை எட்டத் தொடங்கிற்று.

இக்காலில் தேர்தல் பிரசாரம் நடத்துவதென்றால் ஒரு அபேட்சகருக்கு அரசியல், வரலாறு, விஞ்ஞானம், விண்வெளி முதலிய துறைகளில் நிபுணர்களாகவுள்ள பலரின் உதவி தேவை. சொற்பொழிவுகள் எழுதுவோர், வழக்கறிஞர்கள், தொடர்பு அதிகாரிகள், போக்குவரவு-தகவல் துறை வல்லுநர்கள், விளம்பர நிபுணர்கள், நிதிதிரட்டுவோர் ஆகியோரின் உதவியும் தேவை.

பெண்களின் வாக்குகளை இன்று முனைந்து தேடுகிறார்கள். 19-வது நூற்றாண்டிலே இப்படியில்லை. ஏனெனில் பெண்கள் அப்போது வாக்களிக்கவில்லை. இன்று வாக்காளர்களில் பாதிப்பேருக்குமேல் பெண்கள். 40 மாநிலங்களில் ஆண்களைவிடப் பெண் வாக்காளர்கள் அதிகம். தொட்டிலாட்டும் கைகள்தாம் வாக்குரிமையைப் பயன்படுத்துகின்றன என்பது இன்றைய அபேட்சகர்களுக்குத் தெட்டத் தெளிவாகத் தெரிந்த ஒன்று.

சென்ற (1960) ஜனாதிபதி பதவித் தேர்தலை திரும்பிப் பார்த்தால் பிரசாரக் கருவிகளும் தந்திரங்களும் எவ்வளவு மாறியுள்ளன என்பது புலனாகும்.

1960-ல் ரிச்சர்டு நிக்ஸன் 65,000 மைல் பிரயாணம் செய்தார்; மொத்தமுள்ள மாநிலங்களுக்கும் நேரில் சென்று அரசியல் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்; எல்லா வகைச் சாதனங்களையும் முழுமையாகப் பயன்படுத்தினார். அண்மையில் மறைந்த ஜனாதிபதி ஜான் எஃப். கென்னடி (ஜனநாயகக் கட்சி) 43 மாநிலங்களுக்குச் சென்றார்; 44,000 மைல் பிரயாணம் செய்தார்; வெற்றியுடன் வெள்ளை மாளிகையில் குடியேறினர்.

## சைகோனில் சிவிலியன் அரசாங்கம்

சைகோன், அக். 21

தென் வியட்னாமில் சிவிலியன் அரசாங்கம் ஏற்பட்டு விருப்பதாயும், கான் அரசாங்கம் அடுத்தவாரம் காலியாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது. புதிய அரசியலமைப்பின் படி சட்டசபை ஏற்படும்வரை இந்த சிவிலியன் அரசாங்கம் தற்காலிக அரசாங்கமாகக் கடமையாற்றும்.

## சீனாவின் அணுத்தடை யோசனை

பீகிங், அக். 21

ஆயுதப்பரிகரணம் சம்பந்தமாக உலக நாடுகளின் உச்சி மகாநாடு ஒன்று நடைபெற வேண்டும் என்ற யோசனையை சீனப் பிரதமர் சூ-என்-லாய் உலக நாடுகளுக்கு அனுப்பியிருக்கிறார். அணுக்குண்டு சோதனை நடத்திய அடுத்த நாள் அவர் இந்த யோசனையை அனுப்பினார். அணு ஆயுதங்களை பூரணமாகத் தடைசெய்து அழிக்க வேண்டும் என்றும், எந்தச் சூழ்நிலையிலும் சீனா முதலில் அணுக்குண்டை உபயோகிக்காது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

## பிராவ்டா கண்டனம்

மாஸ்கோ, அக். 21

தென் வியட்னாமை நடுநிலைமை பிரதேசமாக்கவேண்டுமென்ற பிரெஞ்சு யோசனையை ரஷ்ய பத்திரிகை "பிராவடா" கண்டித்திருக்கிறது.

## ஐ. நா. வுக்கு பிரிட்டிஷ் ஆதரவு

லண்டன், அக். 21

ஐ. நா. வின், சகல நடவடிக்கைகளுக்கும் பிரிட்டன் பூரண ஆதரவு அளிக்கும் என பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. கோர்டன் வாக்கர் யுதாண்டுக்கு தெரிவித்திருக்கிறார்.

## ஒலிம்பிக் உதைபந்தாட்டம்

டோக்கியோ, அக். 21

வருகிற வெள்ளிக்கிழமை ஒலிம்பிக் உதைபந்தாட்ட சாம்பியன் போட்டி ஹங்கேரிக்கும் செக்கோஸ்லோவேகியாவுக்குமிடையே நடைபெறும். அதே தினம் தான் ஹாக்கி சாம்பியன் போட்டியுமாகும். இந்தப் போட்டியில் பாகிஸ்தானும், இந்தியாவும் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின் நிர்வாகக் காரியதரிசி திரு. கே. ரத்னசபாபதி, பதவி உயர்வு பெற்று கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## தாய். வெளிமந்திரி ராஜினாமா

நான்கெங், அக். 21

தாய்லந்து வெளி விவகார மந்திரி திரு. கோமான் ராஜினாமா செய்து விட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

## சீனாவும் இடம்பெற வேண்டும்

லண்டன், அக். 21

ஆயுதப் பரிகரண மகாநாட்டில் சீனா கலந்து கொள்வதை பிரிட்டன் வரவேற்கும் என பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## "நேட்டோ" ஆலோசனை

பாரிஸ், அக். 21

சோவியத் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி பற்றி நேற்று "நேட்டோ" ஆலோசனை நடத்தியது.

## சாஸ்திரி—சிறிமா 4 நாள் பேசுவர்

புதுடில்லி, அக். 21

இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா நாளை லண்டனிலிருந்து புதுடில்லி வந்து சேருவார் என அறிவிக்கப் பட்டது. வருகிற சனிக்கிழமை இந்தியப் பிரதமர் லால்பகதூருடன் அவர் இலங்கை இந்தியர் பிரச்னை பற்றி பேச்சு ஆரம்பிக்கிறார். இப்பேச்சுக்கள் 4 தினங்கள் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## செரியன் பம்பாய் கவர்னராவார்

பம்பாய், அக். 21

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட லோகசபை உபதேர்தலில் போட்டியிடுவதற்காக ராஜினாமா செய்த மஹாராஷ்டிர கவர்னர் பதவிக்கு சென்னை மேல் சபையின் முன்னாள் தலைவர் டாக்டர் பி. வி. செரியன் நியமிக்கப்படக் கூடும் எனத் தெரிகிறது. அவருக்கு வயது 72.

டோக்கியோ

## அமெரிக்கா 32 தங்க மெடல்

டோக்கியோ, அக். 21

நேற்றுவரை டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா 32 தங்கப்பதக்கங்களையும், ரஷ்யா 17 தங்கப்பதக்கங்களையும், ஜப்பான் 9 தங்கப்பதக்கங்களையும் ஹங்கேரி 8 தங்கப்பதக்கங்களையும் பெற்றன.

## மிஸ் ஜின்னா

டாக்கா, அக். 21

பாகிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மிஸ் பாத்திமா ஜின்னா தேர்தல் பிரசார சுற்றுக்குப் பின் டாக்கா திரும்பினார்.

## அமெரிக்க கொள்கை மாறாது — ஜோன்ஸன்

## பாதுகாப்பு செலவுக்கு ரூ. 27,000 கோடி!

வாஷிங்டன், அக். 21

திரு. குருஷ்சேவின் பதவி துறப்பும், சீன அணுகுண்டு வெடிப்பும் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் எத்தகைய மாறுதலும் உண்டு பண்ணாது என அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் கூறினார். அமெரிக்கா தனது தாக்கும் சக்தியை அதிகப்படுத்தி, ஆயத்தமாய் இருக்கும் என்பதே அமெரிக்காவின் கொள்கையாய் இருக்குமென திரு. ஜோன்ஸன் கூறினார்.

அமெரிக்கா வருகிற ஆண்டு பாதுகாப்புக்காக 5,400 கோடி டாலர் (27,000 கோடி ரூபாய்) செலவிடும் என பாதுகாப்பு மந்திரி மக்னமாரா கூறினார்.

## ஆசிய-ஆபிரிக்க ஆயத்த கமிட்டி

அல்ஜியர்ஸ், அக். 21

பாண்டுங் பாணியில் ஆசிய-ஆபிரிக்க மகாநாடு ஒன்று நடத்துவதற்கான ஆயத்தக் கமிட்டிக் கூட்டம் நேற்று அல்ஜீரியத் தலைநகரில் நடைபெற்றது. சீனா, இந்தியா, ஐக்கிய அரபியக்குடியரசு, இந்தோனேஷியா, கானா உட்பட 11 நாடுகள் இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்டன. மகாநாட்டுக்கு எந்தெந்த நாடுகளை அழைப்பதென்ற பட்டியலை ஆயத்தக்கமிட்டி தயாரிக்கும். இந்த மகாநாடு வருகிற மார்ச் மாதம் அல்ஜியர்ஸில் நடைபெறும்.

## இந்தோனேஷிய அணு உலை

பாண்டுங், அக். 21

அமெரிக்க உதவியுடன் பாண்டுங்கில் அமைக்கப்பட்ட இந்தோனேஷிய அணுசக்தி உலை நேற்று வேலைசெய்ய ஆரம்பித்தது. மருந்துகள், விவசாயம் ஆகியவற்றுக்கான ரேடியோ ஐசடோப்பை இது உற்பத்திசெய்யும்.

## இந்திய-பாக் உள் மந்திரிகள்

ராவல்பிண்டி, அக். 21

இந்தியா-பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரிகள் மகாநாட்டை அடுத்த மாதம் 22-ம் திகதிக்குப்பின் வைத்துக் கொள்ளலாம் என பாகிஸ்தான் யோசனை கூறியிருக்கிறது. கிழக்குப்பாகிஸ்தானில் தேர்தல் நடைபெறவிருப்பதால் இவ்வாறு யோசனைகள் கூறப்பட்டிருக்கிறது.

## மாஜி அமெரிக்க ஜனாதிபதி காலமானார்

நியூயோர்க், அக். 21

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஹெர்பர்ட் ஹூவர் நேற்று நியூயோர்க்கில் காலமானார். அவருக்கு வயது 90. கடந்த சனிக்கிழமை மயக்கமுற்ற அவர், மூர்ச்சை தெளியாமலே இறந்தார். 1929-ம் ஆண்டு முதல் 1933-ம் ஆண்டு வரை இவர் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவிவகித்தார்.

## வெள்ளச்சேதம் ரூ. 50 கோடி

ஹைதராபாத், அக். 21

ஆந்திர பிரதேச வெள்ளத்தில் 50 கோடி ரூபாய்க்கு சேதமேற்பட்டிருப்பதாக புதிய மதிப்பீடு கூறுகிறது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ அரசாங்கம் ரூ. 4 1/2 கோடியை அனுமதித்திருக்கிறது.

# கல்வியின் முக்கிய அம்சம் அன்பேயாகும்

## மகாஜனக் கல்லூரியில் பேராசிரியா குருஸ்

காங்கேசன் துறை, வியா
"கல்வியின் பிரதான அம்சம் அன்பாகும். ஆசிரியர் ஒருவர் தன் கண்காணிப்பிலுள்ள பிள்ளைகளிடம் நேசம் காட்ட வேண்டும். இதனுல் ஆசிரியருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் உள்ள பரஸ்பர நல்லெண்ணம் ஒரு ஸ்திரமான அத்திவாரத்தை கல்விப்பாலதயில் வகுக்கும்" என்றும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 11வது எச். எஸ். ஸி. சங்க விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை சர்வகலாசாலை விலங்கியல் பேராசிரியர் டாக்டர் குருஸ் பேசும்பொழுது தெரிவித்தார்.

மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. ரி. ரி. ஜெயரத்தினம் பேசும்பொழுது தெரிவித்ததாவது:- "மாணவர்கள் கல்லூரியில் பயிலுங்காலத்தில் நல்ல நோக்கங்களையும் சிறந்த கருத்துக்களையும் பயிலவேண்டும். அதனுல் மாணவர்கள் வருங்காலத்தில் வாழ்க்கையில் நல்ல பயனைப்பெறக்கூடியதாகவிருக்கும்."

முன்னுள் உதவிப் பேராசிரியர் திரு. கே. நேசையா பேசுகையில்குறிப்பிட்டதாவது: "இன்று தாய்ப்பாஷையில் கல்வி பயிலும் மாணவர்கள் அந்தப்பாஷையில் நல்ல அறிவு கொண்டவர்களாயும், நடைமுறையில் கல்வி பயிலக்கூடியவர்களாயுமிருத்தல் வேண்டும். அத்துடன் கல்வி, பட்டம் பெற்றவுடன் சம்பளத்திற்குப் பரிமாறக் கூடிய தொன்றல்ல. விஞ்ஞானம் பயிலும் மாணவர்களுக்கு குடியியல், சரித்திரம், இலக்கியம் தெரிந்திருக்க வேண்டும். இதுபோலவே கலைப்பகுதி மாணவர்களும் விஞ்ஞானம் தெரிந்திருக்க வேண்டும்."

பேராசிரியர் குருஸ் மேலும் தெரிவித்ததாவது:- உண்மைகளை, இயற்கையில் அமைந்துள்ளவற்றைக் கண்டு பிடிக்கும் விஞ்ஞானிகள் மனிதாபிமானத்தைப்பற்றியும் நன்ருக அறிந்திருக்கவேண்டும். அவர்களின் கண்டுபிடிப்புகளுக்குசரித்திர முக்கியத்துவம் கிடைப்பதால், அவர்கள்மனுதாபிமானம் தெரிந்தவர்களாக இருப்பது அவசியம். விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வுகூடங்களில் மட்டும் பரிசோதனை நடத்திகொண்டிராது வெளி உலக வாழ்க்கையிலும் பங்குபற்றி சந்தோஷமான வாழ்க்கை வாழவேண்டும்."

## சைவத் தொண்டர் பலர் தேவை

யாழ்ப்பாணம், வியா.
மதுரை திருஞானசம்பந்த ஆதீனத்தாரால் திரு. த. முத்துசாமிப்பிள்ளைக்கு சிவநெறிக்காவலன் என்ற பட்டத்தையும், திரு. மு. மயில்வாகனத்துக்கு சித்தாந்த சிரோமணி என்ற பட்டத்தையும் அளித்தமையைப் பாராட்டுமுகமாக யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் சென்ற சனிக்கிழமை பாராட்டுவிழா நடைபெற்றது.

நாவலர் ஆச்சிரம மண்டபத்திலிருந்து பட்டம்பெற்ற இரு பெரியார்களும் அழைத்துச் செல்லப்பட்டனர். கூட்டத்துக்கு யாழ். சைவபரிபாலன சபை உபதலைவர் திரு. செ. முத்துத்தம்பி தலைமை வகித்தார்.

சேர். கந்தையா வைத்தியநாதன் இவ்விழாவில் கலந்து பேசுகையில், சைவமும் தமிழும் இன்னல்படுகின்ற இன்றைய நிலையில் நாவலர் நினைவு எம்முன்னே நிற்கிறது. மன உறுதியோடு நின்று பணி செய்யும் சைவத் தொண்டர் பலர் தேவையாகின்றது. தற்போதைய சூழ்நிலையில் திருக்கேதீச்சரத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து பணி செய்ய வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்டார்.

விவேகானந்தசபைத் தலைவர் திரு இ. சபாநாயகம் பேசுகையில் யாழ். சைவபரிபாலனசபை, கொழும்பு விவேகானந்தசபை ஆகிய இரு சபைகளும் சைவசமயப் பணியையே செய்து வருகின்றன. நாவலர் பெருமான் மூட்டிய சேவையை இச்சபை செய்து வருகின்றமை கண்டு நாம் மகிழ்ச்சியடைகின்ருேம். அதற்குத் துணையாக தலைவரும், சமயப்பிரசார அமைச்சரும் தோன்ருத் துணையாக இருந்து தொண்டு செய்து வருவதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

திரு. கா. கி. நடராசன், இந்துமகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி வைத்திலிங்கம் ஆகியோரும் இருவரையும் பாராட்டிப் பேசினர்.




BLACK FLAG

பக் கில்லர்

மந்திர சக்தி போன்று

மூட்டைகளை

கொன்று விடுகிறது.

கரப்பொத்தான்கள், சிலந்திப் பூச்சிகள், எறும்புகள், படுக்கை மூட்டைப் பூச்சிகள், மற்றும் ஊரும் பூச்சிகளிலிருந்தும் பாதுகாக்க இதோ உத்தரவாதத்துடன் கூடிய மருந்து. பக் கில்லர். இதில் மலாத்தியான், டில்ட்ரன், பிரித்ரின்ஸ் ஆகியன அடங்கியுள்ளன.

ஸ்ப்ரே இணைப்புடன் கூடிய கைக்குகந்த போத்தலாக கிடைக்கும்.

இன்றே உங்கள் வியாபாரியிடம் ஒரு போத்தல் வாங்குங்கள்-

ஏக விநியோகஸ்தர்கள்;
ஹாயிஸ் பிரவுண் அன் கம்பெனி லிமிட்டெட்,
மக்கலம் ரோடு, கொழும்பு. BK!


## ஆசியா பவுண்டேசனின் நிதிஉதவி

கொழும்பு, வியா.
காலி றிச்மன்ட் கல்லூரியில் ஒரு விவசாய கூட்டுறவு நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்காக "ஆசியா பவுண்டேசன் நிலையம்" 75,000 ரூபாவை கல்வி இலாகாவிற்கு கொடுத்துதவியுளது. இந்த நிலையம் சிறந்த முறையில் பயனளிக்குமாயிருந்தால் இலங்கையிலுள்ள வேறு இரு மத்தியமகாவித்தியாலயங்களுக்கும் "ஆசியா பவுண்டேசன்" உதவி வழங்குவது பற்றி ஆராயுமென்றும் தெரியவருகிறது.

## உப உணவுப்பொருள் இறக்குமதி தாமதம்

கொள்ளுப்பிட்டி, புதன்
செலாவணிக் கட்டுப்பாட்டு இலாகாவுக்கும் உணவு இலாகாவுக்குமிடையில் தோன்றியுள்ள சில வேறுபாடுகள் காரணமாக சில உபஉணவுப் பொருள்கள் இறக்குமதியாவதில் தாமத மேற்பட்டுள்ளது. இதன் விளைவாக பருப்பு, பயறு, பூடு, பம்பாய் வெங்காயம் ஆகியவைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாமெனக் கூறப்படுகிறது.

ரயில் விபத்து

## சி. பி. டி' சில்வா அனுதாபம்

கொழும்பு, புதன்
நான் அம்பாறையில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்த சமயம் புகையிரத விபத்து பற்றிய முதலாவது தகவல் கிடைத்தது. இந்த துக்ககரமான செய்தி கிடைத்ததும். நான் அதிர்ச்சியடைந்ததோடு மிகவும் வேதனைப்பட்டேன். அரசாங்கத்தின் சார்பில் விபத்தில் சிக்குண்டவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன்' என்று மந்திரி திரு. சி. பி. டி. சில்வா வெளியிட்ட அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

இவ்விபத்துப் பற்றி விசாரணைசெய்ய அரசாங்கம் சகல விதத்திலும் முயற்சி செய்யுமென்றும் நஷ்டஈடு கொடுப்பதிலும் அக்கறை காட்டுமென்றும மேலும் அந்த அறிக்கையில் மந்திரி தெரிவித்துள்ளார்.

## ஆராதனைகள்

பருத்தித்துறை, புதன்
பருத்தித்துறை கட்டைவேலிச் சேகர ஆவிக்குரிய எழுப்புதற்கூட்டங்கள் இம்மாதம் 23-ம், 24-ம், 25-ம் திகதிகளில் பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயங்களில் நடைபெறவிருக்கின்றன.

கலாநிதி திரு. டி. ரி. நைல்ஸ், திரு. ஜே. எஸ். மேதர் ஆகியோர் இக்கூட்டங்களையும் ஆராதனைகளையும் நடத்துவார்கள் எனவும் திரு. ஐ. டி. யேசுசகாயம் ஆராதனைகளில்கலந்துகொள்வதுடன் கரவெட்டி ஊற்கோவளம் ஆகிய இடங்களில் விசேட கதாப்பிரசங்கங்களையும் நடாத்தவிருக்கிருர்.

## பட்டதாரி மாணவர்களுக்கு தண்டனை

களனி, புதன்
புதிய மாணவர்களுக்குத் தொந்தரவு விளைவித்ததற்காக களனி வித்தியாலங்காரா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இறுதிப் பரீட்சையில் தோற்றவிருந்த இரு மாணவர்களும் 8 சிரேஷ்ட மாணவர்களும் ஒழுக்க நெறிச் சபையினரால் விரிவுரைகளில்பங்குகொள்ளா வண்ணம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

# சிங்களம் முஸ்லிம்களின் வீட்டு மொழியாகிறதாம்

## வேருவலை எம். பி. கூறுகிருர்

மத்துகம, புதன்
"சமீபகாலம்வரை தங்கள் வீடுகளில் பேசப்பட்டுவந்த தமிழ் மொழிக்குப் பதிலாகச் சிங்களமொழியைப் பேசும்படி, அதிகமான முஸ்லிம் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உற்சாகமூட்டிவருவதை இங்கு பெருமையுடன் தெரிவிக்கின்றேன்" என்று மத்துகம மத்திய கல்லூரியின் இல்ல விளையாட்டுப்போட்டியில் கலந்து கொண்டு பேசும்போது, வேருவலை எம். பி. திரு. ஐ. ஆர். காதர்.

ஜனுப் காதர் தொடர்ந்து கூறியதாவது:-

இலங்கையிலுள்ள மக்கள் எல்லோரும் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதிலும் சரி, மற்றும் விஷயங்களிலும் சரி, ஒரு பொது மொழியை மட்டும் வைத்துக்கொண்டாலே, பொருளாதார துறையிலும், சமூகத் துறையிலும், மற்றும் துறைகளிலும் முன்னேற முடியும்.

நான் பேசும் சிங்களம், நன்ருக இல்லாவிட்டாலும், கடந்த பொதுத் தேர்தலின்பின் நான் சிங்களம் பேசுவதில் வெகுவாக முன்னேற்றமடைந்து விட்டேன். எனது காரியாலய அலுவல்கள் எல்லாவற்றையும் சிங்களத்திலேயே செய்வதற்கு முயற்சியெடுத்துவருகிறேன். அரசாங்க மொழியை, தங்கள் உத்தியோக மொழியாக ஏற்று ஐக்கியப்படவேண்டுமென்பதை மக்கள் விரைவில் உணர்வார்கள்.

முஸ்லிம் மக்களுடைய தாய் மொழியைப் புறக்கணிக்கும்படி நான் கூறவில்லை, அவர்களின் தாய் மொழியாகிய தமிழை இரண்டாவது மொழியாக ஏற்றுக்கொண்டு, சிங்கள மொழிக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும்.

உலகில் மிகப்பெரிய நாடுகளிலும் மொழிப்பிரச்னை இருந்துவருகிறது.

## "சக்தி வழிபாடு அவசியம்"

கொழும்பு, புதன்
"தாய்மைக்கு உயர்ந்த இடமளிப்பது தமிழ் மரபு. கல்வி, செல்வம், வீரம் ஆகிய துறைகளுக்குப் பெண்களையே தெய்வமாக்கி வழிபட்ட பெருமையும் தமிழருக்கே உரியது" என்று திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க ஆதரவில் நடைபெற்ற கலைமகள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவில் மண்டபத்தில் கலைமகள் விழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிக்கு விசேஷபூசை ஆராதனைகள் நடைபெற்றன. விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் நவராத்திரி விழாவைப் பெண்கள் மிகவும் சிரத்தையுடன் கொண்டாட வேண்டியது அவசியமென வற்புறுத்தினர்.

செல்வி சற்சொருபவதி நாதன் பேசுகையில் கூறியதாவது:-

"முயற்சியின்றி பலனை எதிர்பார்க்க முடியாது. முயற்சி வெற்றி பெறுவதற்குச் சக்தி வழிபாடு அவசியமானது. சக்தி வழிபாடு ஆலயங்களில் மட்டும் நடைபெருமல் ஒவ்வொரு கல்விச்சாலைகளிலும் கொண்டாட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்."

செல்வி கமலா லோஜனி வேலுப்பிள்ளையின் இன்னிசைக் கச்சேரி, சைவ முன்னேற்றச் சங்கப் பாடசாலை மாணவிகளின் நடனம், சொற்பொழிவுகள் என்பனவும் விழாவில் இடம் பெற்றன.

## வித்தியாதிபதியை பேட்டிகண்டனர்

சாவகச்சேரி, புதன்
யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த வித்தியாதிபதி திரு. ஈ. எச். டி. அல்விஸை சாவகச்சேரி வாடிவீட்டில் மக்கள் முன்னேற்ற மன்றத்தினர் சந்தித்து வடபகுதியில் வாழும் சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கு கல்வித்துறையில் இருக்கும் பல இன்னல்களை எடுத்துக் கூறினர்.

வடபகுதியில் வாழும் மக்களில் சிறுபான்மைத் தமிழ்மக்கள் மூன்றில் ஒரு பகுதியினராயினும், அவர்களில் ஆசிரியர்களாக உள்ளவர்கள் சுமார் ஒருவீதமானவர்களே என்றும், வேலையற்றிருக்கும் சிறுபான்மைத் தமிழ் பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வழங்குவதன் மூலம் மேலும் பலர் மேற்படிப்புக்குச் செல்ல வாய்ப்பளிக்கும்படியும் இவர்கள் கோரினர்.

சாதாரணப்பயிற்சிக்கு சுமார் இருபது பேரையும், விசேட பயிற்சிக்கு 15 பேரையும் வருடாவருடம் சலுகைகள் மூலம் தெரிவுசெய்யும்படியும் ஆசிரிய கலாசாலைப் பயிற்சி முடித்து இவ்வருடம் வெளியேறும் சிறுபான்மைத் தமிழ் ஆசிரியர்களை வவனியா மன்னார் பகுதிகளில் நியமிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது. வடபகுதியிலுள்ள சிறுபான்மைத் தமிழ் பிள்ளைகள் அதிகமாகப் படிக்கும் பாடசாலைகளுக்கு அதே சமூக ஆசிரியர்கள் இருவரை ஆகுதல் நியமிப்பதோடு சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த தலைமையாசிரியரை நியமிக்கும்படியும் அவர்கள் வித்தியாதிபதியை வேண்டிக்கொண்டனர்.

முன்னுள் செனட்டர் திரு. ஜி. நல்லையா, மக்கள் முன்னேற்றமன்ற கிளைச்செயலாளர் திரு. கே. நடராசா, மாநகர சபை உறுப்பினர் திரு. சேவியர், திரு.வல்லிபுரம் ஆகியோர் கொண்ட குழுவினர் மேற்படி தூதுகோஷ்டியில் அங்கம் வகித்தனர். வடபகுதி உதவி வித்தியாதிபதியும் சாவகச்சேரித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினமும் பேட்டியின்போது பிரசன்னமாயிருந்தனர்.

## "கொலைக் குற்றங்கள் அதிகரிக்கின்றன"

### நீதிபதி கவலை

தங்காலை. புதன்
'கொலைக் குற்றங்கள் இப்போது அதிகரித்து வருகின்றன. இதற்குக் காரணம் நல்ல பழக்க வழக்கங்களும் ஒழுக்க நெறிகளும் குறைந்து வருவதே சமூகத்தின் நலன்கருதி பெற்ருேர் தமது பிள்ளைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களைக் கற்பித்துக் கொடுக்க வேண்டும்.'

இவ்வாறு தங்காலை மாவட்ட நீதிபதி திரு. எஸ். டி. ஜெயசுந்தரா அரன்வெலை வித்தியாலத்தில் நடைபெற்ற சர்வதேச சிருர் தினக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறுப்பிட்டார்.

கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு இவ்வித நல்ல பழக்கவழக்கங்கள் போதிக்கவேண்டும் என்றும் அவர்களை நல்ல பிரஜைகளாக்குவதற்கு வழி வகுக்கப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## கலைக்காட்சி

உடுப்பிட்டி, புதன்
வதிரி தெற்கு ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கலைக்காட்சி ஒன்று நடைபெறவிருக்கிறது. பகுதி வித்தியாதரிசி திரு. வி. நடராசா இக்கலைக்காட்சியைத் திறந்துவைப்பார்.

நீண்ட,
குளுமையுள்ள,
புத்துணர்ச்சியளிக்கும்

# மெட்டஹோன்

குளிர் மென்தோல்
பில்டர் டிப்ட் சிகரெட்டுகள்
உங்களுக்கு நவீன
இன்பமூட்டும் நிகரில்லா
புகைப்பானம்.




இலங்கைப் புகையிலைக் கம்பெனி லிமிடெட்
ஸ்தாபனத்தினால் இலங்கையிற் தயாரிக்கப்பட்டது

## கலைமகள் விழா

யாழ்ப்பாணம், புதன்
குடமியன் அரசினர் பள்ளியில் கலைமகள்விழா விஜயதசமியின்போது சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பள்ளியின் பழைய மாணவர், கிராம மக்கள் ஆகியோர் விழாவில் பங்கு கொண்டனர். அறிவு வளர்தலில் எவரும் உடன்பாடுடையவர். அறிவுத்தெய்வம் கலைமகளாவார். அவளை வழிபடுவதால் வீரம், செல்வம், கல்வி என்பனவற்றை ஈயும் சக்தியில் அருள் வளரும். ஆண்டு தோறும் விழாவினைச் சிறந்த முறையில் நினைவிற் கொண்டுவரின் நாடு வளம் பெறல் உறுதி" எனப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. வி. பொன்னையா உரையாற்றுகையில் குறிப்பிட்டார். மாணவர் குமரகுருபரர், கம்பர், பாரதியார் போன்ற பெருமக்களால் இயம்பப்பெற்ற தோத்திரப் பாடல்களை ஓதினர். ஈற்றில் பங்கு கொண்டவர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பெற்று விழா முடிவெய்தியது.

## பௌத்தபிக்குவின் கண்டனம்

கலபலுவாவ, புதன்
'ஒவ்வொரு மூலைமுடக்கிலும் புத்தபிரானுடைய சின்னங்களை நிறுவுவதும் தேவையில்லாத இடங்களில் கணக்கற்ற பௌத்த ஆலயங்களை அமைத்தலும் உடனே நிறுத்தப்பட வேண்டும்' என வண கொட்டிகாவத்தை சததிஸ மகா தேரோ கலபலுவாவ அந்திய கால சகாய நிதிச்சங்கத்தின் மூன்றுவது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சததிஸதேரோ மேலும் பேசுகையில் கூறியதாவது:

இவ்வித வழக்கங்கள் பௌத்தமதத்துக்கு இழுக்கைத் தேடித் தந்துள்ளன. கண்ட கண்ட இடங்களில் ஆலயம் கட்டுவது போட்டி மனப்பான்மையைத் தோற்றுவித்துள்ளது.

கொட்டாவ எம். பி. திரு. ஜெபேர்ட் குணவர்த்தன பேசுகையில் கலாசார இலாகா அந்தியகால சகாயநிதிச் சங்கங்களுக்கு ஊக்கமளிக்க வேண்டுமெனக் கூறினர்.

## 400 தொழிலாளர் பலியாம்

டாக்கா, அக். 21
கிழக்குப் பாகிஸ்தானில் கடந்த 12-ந் திகதி ஏற்பட்ட வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 300 முதல் 400 தொழிலாளர் மாண்டு போனதாக டாக்கா தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

## முப்படைத் தலைவர்களுக்கு சாஸ்திரி வாழ்த்து

புதுடில்லி, அக். 21
நேற்று தேசிய ஒருமைப்பாட்டுத் தினத்தையொட்டி பிரதமர் சாஸ்திரி முப்படைத் தலைவர்களுக்கு அனுப்பிய செய்தியில் சீனப் படையெடுப்பின்போது அவர்கள் காட்டிய தீரம், திண்மை, ஒற்றுமை, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றைப் புகழ்ந்துரைத்திருக்கிறார்.

## அறிவித்தல்

மத்துரட்டையில் ஈழநாடு விற்பனையாளர்: கே. ஒஜீர் கான், நியூஸ் ஏஜென்ட் கொலைக்கொலை பசார், மத்துரட்டை. 956

## வரி விளம்பரம்

அனுபவம் வாய்ந்த சீன நிபுணரால் இயற்கை அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டுவதற்கு உகந்த இடம் யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே. கண் பார்வை பரிசோதனை செய்தும், டாக்டரினல் சிபார்சு செய்த கண்ணாடிகள் அழகிய பிரேம்களில் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். எஸ். எம். பெர்ணண்டோ, பிரதானவீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம். 895

### தேவை

எமது ஊதுபத்தி தொழிற்சாலையில், பத்திகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள பெண்களும், பெண் பிள்ளைகளும் வேலைக்குத் தேவை.

வேலையில் ஊக்கமுள்ளவர்களும், நல்லொழுக்கமுடையவர்களும்மாத்திரம் நேரில் விண்ணப்பிக்கவும்.

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 53, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்,
1028

அலுமினியப் பாத்திரம் தயாரிக்கக்கூடிய திறமை வாய்ந்தவர் தேவை. எவர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
1041

செயற்கை பிரம்பால் (Plastic Rattan) நாற்காலி வகைகள் பின்னுவதில் அனுபவம் வாய்ந்த பெண்பிள்ளைகள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். டவுரும்ஸ், யாழ்ப்பாணம். 1042

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலைக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## வித்தியாதிபதிக்கு விருந்துபசாரம்

பருத்தித்துறை, புதன்
உடுப்பிட்டித் தொகுதித் தமிழ்ப் பாடசாலைகளின் தலைமையாசிரியர் சங்கம், இங்கு விஜயம்செய்த வித்தியாதிபதி திரு. எச். அல்விஸுக்கு இரவு விருந்தளித்துக் கௌரவித்தது.

வடமாநில உதவி வித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் தலைமையில் மெதடிஸ்த மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விருந்தில் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. ரூபேர்ட் சில்வா, மாவட்ட நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர், காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆனல்ட், சுகாதார வைத்திய அதிபர் திரு. ஏ. வி. ஜீவநாயகம், மாவட்ட வித்தியாதிபதி திரு. வே. நடராசா, வட்டார வித்தியாதரிசி திரு. வி. தர்மசங்கரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

"DEEPAVALI ARRIVALS"
Help the Local Industry
Buy
Beautiful **HANDLOOM** Sarees
Just unpacked for the
Season
Prices: Rs. 19-50 upwards
**DAYARAMS**
JAFFNA.

# நாளை ஒலிம்பிக் ஹாக்கியில் இறுதி ஆட்டம்

## இந்தியாவும் பாகிஸ்தானும் பங்குபற்றுகின்றன

டோக்கியோ, அக். 21

டோக்கியோ ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு இந்தியாவும், பாகிஸ்தானும் தகுதிபெற்றிருக்கின்றன. வருகிற வெள்ளிக்கிழமை இரு நாடுகளும் இறுதிப் போட்டியில் பங்கெடுத்துக்கொள்ளும்.

இன்று நடைபெற்ற 'பி' பிரிவு செமிபைனலில் இந்தியா ஆஸ்திரேலியாவை 2-1 கோல்களால் தோற்கடித்தது. ஆஸ்திரேலியா ஆட்டம் ஆரம்பித்து பதினொராவது நிமிஷத்தில் முதல் கோலைப் போட்டது. இதற்குப் பின் இந்தியா அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டது.

சென்ற ஒலிம்பிக் போட்டியில் ஹாக்கியில் வெண்கலப் பதக்கம் பெற்ற ஸ்பெயினை பாகிஸ்தான் மற்றோர் செமிபைனலில் 3-0 கோல்களால் தோற்கடித்தது. அறுபது நிமிடங்களுக்குப் பின்பே பாகிஸ்தான் கோல் போட ஆரம்பித்தது. இது 'ஏ' பிரிவு ஆட்டம்.

வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் நாட்டுக்கு ஹாக்கியில் தங்கப்பதக்கம் கிடைக்கும். இந்தியா சுமார் முப்பது ஆண்டுகள் ஹாக்கி விளையாட்டில் தொடர்ந்து உலகச் சாம்பியனாய் விளங்கி, கடந்த 1956ம் ஆண்டு ரோம் ஒலிம்பிக்கில் பாகிஸ்தானுக்குப் பறிகொடுத்தது.

# கிளர்ச்சித் தலைவர் கைது

அல்ஜியர்ஸ், அக். 21

அல்ஜீரியாவில் பென்பெல்லா அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்திய கலகத் தலைவர் பிடிபட்டிருப்பதாயும், அவர் விசாரணைக்கு உட்படுத்தப்படவிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

# எதிர்க்கட்சிகள் உண்ணாவிரதம்

சென்னை, அக். 21

உணவு நிலைமையை எதிர்த்து தமிழ்நாடு சீழ் சட்டசபையைச் சேர்ந்த 64 எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் இன்று காலை பதினொருமணி நேர உண்ணாவிரதம் ஆரம்பித்தனர். சட்டசபையில் இன்று எதிர்க்கட்சியினரின் ஸ்தானங்கள் காலியாகவே இருந்தன. காங்கிரஸ் கட்சியினர் மட்டுமே சபைக்கு வந்திருந்தனர்.

இந்த உண்ணாவிரதத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திரா கட்சி, முஸ்லிம்லீக், சம்யுக்த சோஸலிஸ கட்சி ஆகியவை கலந்துகொண்டன.

# கண்டெடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், வியா.

ரொக்கப்பணம் நூறு ரூபாயும் வேறு பொருள்களும் கொண்ட பேஸ் ஒன்று சென்ற மாத இறுதியில் யாழ்ப்பாணம் கச்சேரி விருந்தையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தக்க அத்தாட்சி காட்டி அலுவலக உதவி அதிகாரி (ஓ. ஏ) யிடமிருந்து இதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

# உண்டியலை உடைத்து திருடினராம்

மாவிட்டபுரம், புதன்

கொக்குவிலைச் சேர்ந்த இரத்தினம் ஜீவரத்தினம் என்பவர் சென்ற 11-ம் திகதி தெல்லிப்பழை கிழக்கு அன்னம்மா கோயிலை உடைத்து அதனுள்ளிருந்த உண்டியல் பெட்டியை உடைத்ததாக சுன்னாகம் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ் எச். அத்துருபாறு முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

கோட்டில் சங்கரன் செல்லன், நாகன் கந்தன் ஆகிய இருவரும் அச்சமயம் கோவிலடி வழியாக வந்தபோது சம்பவத்தைக் கண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிரி தான் குற்றவாளியென்றார். நீதிபதி எதிரியின் கைவிரல் அடையாளத்தை எடுக்க உத்தரவிட்டு வழக்கைத் தீர்ப்புக் கூறுவதற்காக ஒத்தி வைத்து எதிரியை 750 ரூபாய் பிணையில் செல்லும்படி உத்தரவிட்டார்.

# குடும்பத்திட்ட கொண்டாட்டம்

கல்லூர், வியாழன்

சுவீடன் இலங்கை குடும்பத்திட்ட முன்னேற்றக் கொண்டாட்டங்கள் பருத்தித்துறை சுகாதாரப் பகுதியில் கடந்த ஒரு வார காலமாக நடைபெற்று வருகின்றன. இக்கொண்டாட்டங்களில் இறுதி நிகழ்ச்சிகள் இன்று வியாழக்கிழமை பருத்தித்துறை வடமத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும். இவ்விழாவில் சுவீடன் தேசத்துப் பிரதிநிதி டாக்டர் ஏ. கின்ச் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

'வாழ்வு மலர்ந்தது' என்ற நாடகமும், நினைவு மலர் வெளியீடும் இன்றைய விழாவில் இடம் பெறும். குடும்ப நலக் கொண்டாட்டங்களை யொட்டிய பகிரங்கக் கூட்டங்கள் புலோலி, உடுப்பிட்டி, கரவெட்டி, கரணவாய், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, செம்பியன்பற்று ஆகிய இடங்களில் கடந்த ஒருவாரகாலமாக நடத்தப்பட்டன.

# வடக்கு, கிழக்கு பகுதிக்கு புதிய பஸ்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

ஜனவரி மாதத்திற்கு முன் வடபகுதிக்கும் மட்டக்களப்பு பகுதிக்கும் புதிய பஸ்கள் பல அனுப்பிவைக்கவும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் புதிய பஸ்கள் சிலவற்றை நேராக யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் அனுப்பிவைக்கவும் போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா தீர்மானித்துள்ளதால் யாழ்ப்பாணத்தில் பஸ் போக்குவரத்துச் சேவை சீராக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பளிப்பதென்றும் பிரயாணிகள் சங்கத்தினதும் தொழிற் சங்கங்களினதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் இலங்கை போக்குவரத்துச் சபையினருக்குப் பெற்றுக் கொடுப்பதென்றும் அரசாங்க தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனத்தின் யாழ்ப்பாணக் கிளை தீர்மானித்துள்ளது.

பஸ் பிரயாணிகள் சங்கத்தையும் தொழிற் சங்கங்களையும் கொண்ட மக்கள் குழுவைத் தெரிவு செய்வதென்றும் பஸ் போக்குவரத்துச் சேவை சீராக நடைபெற இந்தக் குழுக்கள் இ. போ. சபைக்கு உதவி செய்யுமென்றும் சம்மேளனம் தீர்மானித்தது.

# மீண்டும் தமிழ் 'சிறீ' இயக்கம் ஆரம்பிக்க முடிவு

## தமிழரசு வாலிப முன்னணி தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

மீண்டும் தமிழ் 'சிறி' இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு தமிழரசு வாலிப முன்னணி முடிவு செய்துள்ளது. இது சம்பந்தமாக தமிழரசு வாலிபமுன்னணி தொண்டர்களை இன்று உடனடியாகக் கட்சிக் காரியாலயத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவிருப்பதாகவும் தெரிய வருகிறது.

சிங்கள 'ஸ்ரீ' எதிர்ப்பு இயக்கம் கைவிடப்படவில்லை என்று தமிழரசுக்கட்சியின் செயற்குழு சென்றவார இறுதியில் தெரிவித்திருந்தது.

புதிய 'ஸ்ரீ' பஸ்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவிருப்பதைத் தொடர்ந்து தமிழ் 'ஸ்ரீ' பொறிக்கும் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதென தமிழரசு வாலிப முன்னணி தீர்மானித்துள்ளது. தமிழ் 'ஸ்ரீ' எழுத்துடன் பஸ்கள் சேவை செய்வதால் பஸ்சேவை தடைப்படமாட்டாதென்றும் அரசாங்கம் தடை செய்யும்வரை பஸ்கள் சேவை செய்ய முடியுமென்றும் போக்குவரத்து வேண்டுமென்றால் சிங்கள 'ஸ்ரீ' பஸ்களில் பிரயாணம் செய்யும்படி வற்புறுத்தும் அரசாங்கம் கல்வி அறிவு வேண்டுமென்றால் சிங்களத்தில் படியுங்கள் என்று கேட்கலாமென்றும் எனவே இதைத் தடுக்க 'ஸ்ரீ' சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றும் தமிழரசு வாலிப முன்னணி தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# 'இலங்கையின் நலன்களுக்கேற்ப நடவடிக்கை எடுத்திருக்கிறோம்'

## பிரிட்டிஷ்மூலதனம்பற்றி ஸ்ரீமதிபண்டாரநாயகா

லண்டன், அக். 21

இலங்கை அரசாங்கம் ஏற்றிருக்கும் பொருளாதார நடவடிக்கைகள் அங்குள்ள சில பிரிட்டிஷ் நலன்களைப் பாதித்திருந்தாலும், இலங்கையின் தேசிய நலன்களைக் கருத்தில் கொண்டே அப்படிச் செய்யப்பட்டதாய் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சனிடம் கூறியிருப்பதாய்த் தெரிகிறது.

விரைவில் சந்தர்ப்பம் கிடைக்கும்போது பிரிட்டிஷ் மூலதனக்காரர்களின் கஷ்டங்களை நீக்க இலங்கை அரசாங்கம் முயற்சி செய்யும் எனவும் அவர் கூறினார்.

இலங்கைக்கு இயன்றவரை உதவிசெய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் முயற்சி செய்யும்என புதிய பிரதமர் திரு. வில்சன் ஸ்ரீமதி பண்டாரநாயகாவிடம் உறுதி கூறினார்.

இலங்கைப் பிரதமருக்கு பிரிட்டிஷ் பிரதமர் அளித்த விருந்துபசாரத்தில் இச்சம்பாஷணைகள் நடைபெற்றதாகக் கூறப்பட்டது.

ஸ்ரீமதி பண்டாரநாயகா வில்சன் தம்பதிகளால் விருந்துக்கு வரவேற்கப்பட்ட படம் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. பல பிரிட்டிஷ் மக்கள் அவர் புனித பௌத்த சின்னத்துடன் லண்டன் வந்ததை டெலிவிஷனில் கண்டுற்றனர்.

# கிரிக்கெட்டெஸ்ட் நேற்று நடைபெறவில்லை

கல்கத்தா, அக். 21

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே மழை காரணமாக இன்று கிரிக்கெட் டெஸ்ட் நடைபெறவில்லை. இறுதிநாளான நாளை வியாழக்கிழமை ஆஸ்திரேலியா தனது 2-ம் இன்னிங்ஸை தொடர்ந்து விளையாடும்.

# நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா.

அண்மையில் நடைபெற்ற நவக்கிரி இளைஞர் மன்ற பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

மேற்பார்வையாளர்:- க. சுந்தரமூர்த்தி, தலைவர்: நா. செல்வநாயகம், உபதலைவர்: சி. தாமோதரம்பிள்ளை, பிரதம செயலாளர்: இ. சந்திரன், செயலாளர்கள்: சி. பொன்னுத்துரை, நீ. செல்லக்கண்டு, இணைத்தனாதிகாரிகள்: சி. விளுசித்தம்பி, வே. கந்தசாமி.

# அறிவித்தல்

புங்குடுதீவு 5-ம் வட்டாரம் காலஞ்சென்ற திரு. வே. விசுவலிங்கம் அவர்களின் புதல்வனும், இரத்தினபுரி அரசினர் வைத்தியசாலையில் அப்போதிக்கரியாகக் கடமையாற்றுபவருமான (R A) திருவளர் செல்வன் கனகரத்தினம் அவர்களுக்கும், தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. சி. முருகேசு (C. C S.) அவர்களின் ஏக புத்திரி திருநிறைசெல்வி தடாதகைப்பிராட்டியார் (B. A) அவர்களுக்கும் 19-10-64 திங்கட்கிழமை சுத்த மங்கள சுப முகூர்த்தத்தில் திருமணப் பதிவு நிறைவெய்தியது என்பதை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்புள்ள,
விசுவலிங்கம்-கார்த்திகேசுவும்,
(மணமகனின் தமையனார்),
பாரியாரும்.

புங்குடுதீவு-5. 1044


கடைசி நாள்!
ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன்: 485
6-30 காட்சி மாத்திரம்
சம்பூர்ண
மகாபாரதம்
இரவு 9-30 மாத்திரம்
பியா மிலன் கி யாஸ்
(ஹிந்தி)
PIYA MILAN KI AAS

REGAL — JAFFNA
NOW SHOWING
Steve Reeves
IN
HERCULES
(ஹெர்குலீஸ்)
( Cinemascope - Color )

மங்களகரமான 4வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
குயின்லன் (துகொடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)
வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை)



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
பணக்கார குடும்பம்


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 6-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.